

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி காணை மத்திய ஒன்றியம் அதனூர், சூரப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு வீதி, வீதியாக உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார். சட்டமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர் ஆர்.பி. முருகன், நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# எப்போது கண் விழிக்கும் இந்திய ஜனநாயகம்?

## கணையாழி தலையங்கம்!

**வா**ழ்வின் இயக்கம்
மாற்றத்தில் இருக்கிறது!

எனினும் சமுதாய மாற்றம் என்பது தானாக வரும்
இரவு, பகல், புயல், மழை,
எரிமலை, சுனாமி என்ற
இயற்கை மாற்றங்களில் இல்லை!

சமுதாய வாழ்க்கையை வளர்த்தெடுப்பவை
தொடர் போராட்டம் தரும் மாற்றங்களே!

ஜனநாயகம் என்பது தானே கிடைத்த
அதிகாரக் கொடை இல்லை!

நமது முன்னோரின் உழைப்பில் கிடைத்த
அரசியல் சொத்து!
நமது குழந்தைகளுக்கு
நாம் விட்டுச் செல்ல வெண்டிய
சொத்துரிமை!

அதிகாரத்தையே மாற்றிக் காட்டும்
ஜனநாயகத்தின் வாழ்வு
மக்களின் வாக்களிப்பில் இருக்கிறது!

ஜனநாயகக் காற்றில்தான்
பல கொடிகள் பறக்க முடியும்!

கண்டும் காணாமல் போவது
எதிர்ப்பின் வெளிப்பாடு அன்று
அச்சத்தின் அவலக் குறியீடு!

பேச முடியாத மௌனம்
கல்லறைவாசிகளின் நிலைப்பாடு!

பேச வைப்பது கல்வி!
கல்வி தரும் விழிப்புணர்வு
தலைமுறைகளை உருவாக்கும்!
தன்மதிப்பை உயர்த்தும்!
வறுமையைப் போக்கும்!
அநீதியை எதிர்க்கும்!
மனித உரிமைக்குப் போராடும்!

அயோத்தியில் இராமர் சிலைக்குக்
கண் திறக்கிறார்கள்!
கன்னியாகுமரியில்
ஊடகக் கண்கள் திறந்திருக்க
தியானம் செய்கிறார்கள்!

இராமருக்குக் கண் திறந்த
அயோத்தியிலும் வெற்றி இல்லை
கண்மூடி தியானம் செய்த
கன்னியா குமரியிலும் வெற்றி இல்லை!

நமக்கு வேண்டியதைப் பெற
நாம்தான் உழைக்க வேண்டும்!

கண்மூடி அமர்ந்திருந்தால்
வெற்றி வந்து மடியில் விழாது
என்பதைத்
தேர்தல் முடிவுகள் தெரிவித்துள்ளன.

ஆகவே
மக்களின் விழிப்பில்தான் இருக்கிறது
ஜனநாயக வெற்றி என்பதை
அயோத்தியும் கன்னியாகுமரியும்
அறிவித்திருக்கின்றன.

ஞானம் பெற்றபின்
விவேகானந்தரான
நரேந்திர நாத் தத்தா
கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே
குரு வேண்டாம் என்றார்
ஆனாலும் குருவாக ஏற்றார்
பரமஹம்சரை!

மதச் சடங்குகள் தேவையற்றவை
குழந்தைத் திருமணம்
உடன்கட்டை ஏறுதல் ஆகியவை
சமுதாய வளர்ச்சிக்குத் தடை என்ற
விவேகானந்தர் கண்மூடி
தியானம் செய்த இடம்
விவேகானந்தர் பாறை!

ஆனால்
“தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு” என்று
கையில் சுவடியுடன் கண் திறந்து
விழிப்புடன் செம்மாந்து நிற்கிறது
கன்னியாகுமரியில்
திருவள்ளுவர் சிலை!

ஆகவே உலகக் கோப்பை வெற்றிக்
கொண்டாட்டத்தில் நீட், நெட் தேர்வுக்
குளறுபடிகளைக் கண்டுகொள்லாமல்
கடந்துபோக வைக்கும் கண்மூடித்தனம்
இல்லாமல் விழிப்பில் இருக்கட்டும்
நாடாளுமன்ற ஜனநாயகம்!

ஜனநாயகத்திற்குப்
பார்வையாளர்கள் தேவையில்லை
பங்கேற்பவர்கள் வேண்டும்!

ஜனநாயகத்திற்கு
மக்கள் தேவையில்லை
ஆனால்
உரிமையுடன் வாழ விரும்பும்
மக்களுக்கு ஜனநாயகம் தேவை!

ஜனநாயகம்
உரிமை மட்டுமில்லை
பெருமித வாழ்வுக்கான அடித்தளம்!

ஆகவே
எப்போதும்
விழிப்பில் இருக்க வேண்டும்
ஜனநாயகம்!

விழிப்புடன் இருக்கக்
கண்கள் வேண்டும்!
எண்ணும் எழுத்தும்
ஜனநாயகத்தின் கண்கள்!
கல்வி

ஜனநாயகத்தின் காவல் தெய்வம்!
கல்வி வளர்ச்சியில் உள்ளது
ஜனநாயக விழிப்புணர்வு என்பதை
அண்மைக்காலத் தேர்தல் முடிவுகளும்
அறிவித்திருக்கின்றன!


மக்கள்
நல்லவர்களாக இருக்கிற போது
மக்களின் பிரதிநிதிகளும்
நல்லவர்களாகத் தானே
இருக்க வேண்டும்!

இல்லையென்றால் எங்கே கோளாறு?
கோளாறு எப்படி என்று
கண்டு, அறிய மக்களுக்குக்
கல்விக் கண் வேண்டும்!

எனவே
பள்ளிக் கல்வி முதல்
கல்லூரிக் கல்விவரை
மாணவர்களுக்கு
ஊக்கத் தொகை வழங்கிக்
கல்வியை மறுக்கும்
வறுமையை விரட்டி
ஜனநாயகத்தின்
கண்களைத் திறந்திருக்கிறார்
தமிழ்நாட்டு முதல்வர்!

ஆம்
விழித்திருக்கிறது
தமிழ்நாட்டில் ஜனநாயகம்!

அது சரி
எப்போது கண் விழிக்கும்
இந்திய ஜனநாயகம்?



அன்புடன்
**ம.ரா.**

நன்றி : **கணையாழி**



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் முட்டத்தூர் ஊராட்சி 105 பாகத்திற்கு உட்பட்ட பகுதியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். அருகில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### விக்கிரவாண்டி இடைத் தேர்தல்

# வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தீவிரப் பிரச்சாரம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் மேற்கொண்டார்!

விழுப்புரம், ஜூலை 4 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முட்டத்தூர், செ.புதூர், ஊராட்சிகளில் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில், ஒவ்வொரு இல்லம் தேடி திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் வீடு தேடி வந்துள்ளது.

அந்த வகையில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம், உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. வல்லரசு நாடுகள் கொண்ட வெளிநாட்டில் கூட படிக்கின்ற மாணவர்கள்தான் கல்வி கட்டணம் செலுத்துகின்ற நிலை உள்ளது.

ஆனால் தமிழ்நாட்டில் முதன் முதலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞரின் வழி தோன்றல் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க ஸ்டாலின் புதுமைப் பெண் திட்டத்தை அறிவித்து மாதம் ஆயிரம் ரூபாயும் தற்போது தமிழ் புதல்வன் திட்டம் மூலம் மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

முதலமைச்சரின் பல்வேறு சிறப்பு திட்டங்கள் கிராம மக்களிடம் சென்று சேர்ந்ததால் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம் உள்ளிட்ட புதுவை ஆகிய 40 தொகுதிகளிலும் தி,மு,க, கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

அந்த வகையில் தற்போது நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் உதய சூரியன் சின்ன த்திற்கு வாக்களிக்க வேண்டும். உதய சூரியன் சின்னத் திற்கு வாக்களிப்பதால் திராவிட மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களிடையே வந்து சேரும் ஒவ்வொரு குடும்பத்தி லும் உள்ளேயும் முதலமைச்சர் ஸ்டாலின் உள்ளார் அவரது திட்டங்களும் உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

வாக்குச் சேகரிப்பின் போது விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் டாக்டர் சேகர்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன்,

அண்ணாதுரை, ரவிச்சந்திரன், பச்சையப்பன் விஜயராகவன், இளம்வழுதி, துரை, செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய கவுன்சிலர் முகிலன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கருணாநிதி, அன்பழகன்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

### திராவிட இயக்க தீரர் நினைவில் வாழும்

# இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமி 23 ஆம் ஆண்டு நினைவு நாள்!

இராசிபுரம், ஜூலை. 3

நாமக்கல் மாவட்டம், திராவிட இயக்கதீரர் நினைவில் வாழும் இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை (5.7.2024 - வெள்ளிக்கிழமை) கடைப்பிடிக்கப்படுகிறது.

பொதுவாழ்வில் தூய்மை என்பதை தன் பிறப்பிலே பெற்றவர் இராமசாமி என்று தந்தை பெரியார் அவர்களும், கழகத்திற்கு பெருமை சேர்ப்பவர் இராமசாமி என்று பேரறிஞர் அண்ணா அவர்களும், பதவி பெரிதல்ல கொள்கை தான் பெரிது என்று வாழ்ந்து மறைந்தவர் இராமசாமி என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், இராமசாமி எனக்கு நண்பர் என்று சொல்வதில் எனக்குப் பெருமை என்று இனமான பேராசிரியர் அவர்களும், என்னைப் போன்று பல எளிய குடும்பத்தைச் சேர்ந்த கிராமப் புற மாணவர்களை மருத்துவர்களாக ஆக்கிய உத்தமர் என்று கோவை, ஜெம் மருத்துவமனை, டாக்டர் பழனிவேல் ஆகியோர் புகழ்ந்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து சிறந்த கூட்டுறவு வங்கித் தலைவர் விருதும்,

1999 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடமிருந்து மாநில சிறந்த கூட்டுறவாளர் விருதும்,

இராசிபுரம் ஒன்றிய தி.மு.க. செயலாளராகவும், நாமகிரிப்பேட்டை ஒன்றிய தி.மு.க. செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், 1962 முதல் 2000 வரை இராசிபுரம் கூட்டுறவு நில வள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு நில வள வங்கிப் பெருந்தலைவராகவும் என பல பொறுப்புகளை வகித்தார்.

இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமியின் பேரன் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். என்.ராஜேஸ்குமார் என்பது குறிப்பிடத் தக்கது.

---

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்

# அமைச்சர் தா.மோ. அன்பரசன் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார்!

விழுப்புரம், ஜூலை 4 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க. வினர் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று சிறுகுறு மற்றும் தொழில்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முட்டத்தூர், ஊராட்சியில்தேர்தல் களப்பணியில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகள், மற்றும் பாகம்முகவர்களை சந்தித்துதேர்தல் பணி குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

அப்போது நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் முதலமைச்சரின் பல்வேறு சாதனைகளை வாக்காளர்களிடம் கொண்டு சென்று திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டுமென வாக்காளர்களிடம் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். வாக்கு சேகரிப்பின் போது தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, ரவிசந்திரன், துரை, திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், செயற்குழு உறுப்பினர் சீனிராஜ், விழுப்புரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அமைப்பு சாரா அணிய அமைப்பாளர் தமிழரசன், ஆதிதிராவிடர் நலக் குழு அணி அமைப்பாளர் திருமலை, கிளை செயலாளர் கருணாநிதி உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்துகொண்டனர்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, பெரியகடைவீதி பகுதி1, வார்டு எண்: 81,69,70, இராஜவீதி பேட்டை ஈஸ்வரன் கோவில்,காமராஜர்நகர் பகுதிகளில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்,கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால்,துணை அமைப்பாளர் திருமலைராஜா மேற்பார்வையில்,பெரிய கடைவீதி பகுதி1 செயலாளர் மார்க்கெட் எம்.மனோகரன் தலைமையில், 81 வது வட்டக்கழகச் செயலாளர் டவுன் பா.ஆனந்த், ப.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில், இல்லந்தோறும் இளைஞர் அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது இந்நிகழ்வில் மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ்,கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா. செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் ம.மகுடபதி, வட்டக் கழகச் செயலாளர் சுரேஷ் நாராயணன், மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இப்னு மசூது, க.மணிகண்டன்,கோவை அருண், துரைபிரவீன்,பகுதி துணைச்செயலாளர்கள் பழக்கடை முத்து முருகன், புவனேஸ்வரி, பகுதிக்கழக நிர்வாகிகள் அருண்குமார், பாலன், இளைஞரணி தினேஷ், கார்த்திக்,கோவை சங்கர்,பாலாஜி விக்னேஷ், இணையதள சிவா,தாமஸ் வீதி ராஜா,வட்டக்கழக நிர்வாகிகள் கோபி,ரங்கராஜ்,புவனேஷ்வரி,கார்த்திக்கேசவன் ex MC.,,செந்தில்குமார், IT WING சுரேஷ், இரா.முருகேஷ், இரா.முருகேஷ், கமலேஷ்,பிரசாந்த்,தினேஷ் பாபு, ஐயப்பன், கணேஷ், இளைஞரணி விக்கி,வடகோவை ஜார்ஜ், அஸ்வின்,கண்ணன், ராஜேஷ் கண்ணன், தீபன்,கோபி, LPF நாகராஜ், ஆட்டோபிரதீப், வழக்கறிஞர் வி.லிங்கராஜ், ஆட்டோகுமார், பிரசாந்த், தபு, நந்தகுமார், பிரவீன், சூர்யா, சபரி, ஸ்யாம்,கோ.மா.சுப்பிரமணியம், வழக்கறிஞர் கரிகாலன்,கோபி ஆனந்த், காலனிபிரசாந்த், கே.ஆனந்தகுமார், எம்.உதயகுமார், அருணாசலம், தியாகி நாகராஜ்,ஜெயபிரகாஷ், A.மகேந்திரா,A.கோவிந்தராஜ், ரமேஷ்,கார்த்தி கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.